**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 06.11.2024**
**O.S. 92/2011**
**வா.சா. 1 – சுந்தரலிங்கம்**

**1வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி ராஜவேல் எனக்கு உறவினரா என்றால் இல்லை. ஏ பட்டிகை சொத்துக்கு 1ம் பிரதிவாதி ராஜவேல் எனக்கு எந்த இடைஞ்சலும் தரவில்லை என்றால் சரிதான். ஏ பட்டிகை சொத்தில் என்ன மரங்கள் உள்ளது என்றால் தென்னை, வாழை உள்ளது அதை நான் தான் அனுபவித்து வருகிறேன். எனது சொத்துக்கு வடக்கில் ரோடு என்றால் சரியல்ல மண்ரோடு பொது பாதை. மண் ரோட்டுக்கு வடக்கே 1ம் பிரதிவாதி சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து தவிர 1ம் பிரதிவாதிக்கு வேறு சொத்து கிடையாது என்றால் தெரியாது. நான் 1ம் பிரதிவாதியிடம் அவரிடம் அவருடைய சொத்தை விலைக்கு கேட்டேன். அவர் தரமுடியாது என சொல்லிவிட்டார் அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியவாறு 1ம் பிரதிவாதி எனது சொத்தை எப்போது ஆக்கிரமிக்க முயற்ச்சித்தாரா என்றால் எனது சொத்தை 1ம் பிரதிவாதி ஆக்கிரமிக்க முயற்ச்சிக்க வில்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லிய 1ம் பிரதிவாதி எனது சொத்தை எப்போது ஆக்கிரமிக்க முயற்ச்சித்தார் என சொன்னது தவறு என்றால் சரிதான். 1ம் பிரதி எனது சொத்தில் எந்த உரிமையும் கேட்கவில்லை என்றால் பாதையின் வடக்கு ஓரமாக 1ம் பிரதி காம்பவுண்டு கட்டியுள்ளார் அது பொது பாதையை ஆக்கிரமித்து கட்டியிருக்கலாம் அப்படி கட்டியிருந்தால் எனது சொத்து பாதிக்கும். 1ம் பிரதிவாதி பொது பாதையை எவ்வளவு பகுதி ஆக்கிரமித்துள்ளார் என்றால் தெரியாது அளந்து பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதி பொது பாதையை ஆக்கிரமித்துள்ளார் என எனது வழக்குறையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதி எனது சொத்தை ஆக்கிரமிக்க முயற்ச்சித்ததாக சொன்னது

அதை தடுத்ததாக சொன்னது பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 6 தோராய வரைபடத்தில் 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக காட்டவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதி என்னை எந்த இடையூறும் செய்யவில்லை அவரை தேவையில்லாமல் கட்சி சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியை தேவையில்லாமல் கட்சி சேர்த்ததால் அவருக்கு நஷ்டஈடு கொடுக்க நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**